**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.113/2023
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : ஜெயதீபா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of May 2024.

08.05.2024

(1ம் எதிரி ஆஜர், 2 முதல் 4ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். அசா.1 பூப்பாண்டி எனது கணவர் ஆவார். 07.02.2023ம் தேதி இரவு 09.30 மணியளவில் 1ம் எதிரி அர்ச்சுணன் மது அருந்திவிட்டு எனது கணவர் அசா.1யை அசிங்கமாக பேசினார். அதற்கு எனது கணவர் அசா.1, 1ம் எதிரியை பார்த்து ஏன்டா இப்படி பேசுகிறாய் என்று கேட்டார். அதற்கு 1ம் எதிரி பட்டாவை என்னிடம் கொடுக்காமல் எனது அப்பாவிடம் கொடுத்தாய் என்று கூறினார். உடனே அங்கிருந்து எனது கணவர் வந்துவிட்டார். 1ம் எதிரி அர்ச்சுணன் அருவாமனையை எடுத்துக்கொண்டு வெட்டிவிடுவேன் என்று கூறினார்.

2) 1ம் எதிரியின் மனைவி 2ம் எதிரி பழனி கம்பை எடுத்துக்கொண்டு அடிக்க ஓடிவந்தார். அப்போது கண்டிலான் கிராமத்தை சேர்ந்த 1ம் எதிரியின் மகன் இளஞ்சிறார் தினேஷ் கத்திகம்பை எடுத்து எனது கணவரின் வலது பக்க கண்ணிற்கு அருகே வெட்டிவிட்டார். அப்போது 3ம் எதிரி சேதுபாண்டி எனது கணவரை பிடித்துக்கொள்ள 4ம் எதிரி செல்வி கம்பியை வைத்து எனது கணவர் அசா.1ன்

தலையில் அடித்துவிட்டார். எனது கணவரின் காலிலும் காயம் ஏற்பட்டது. பின்பு நானும், எனது அத்தை லெட்சுமியும் சண்டையை விலக்கிவிட்டு காயம்பட்ட எனது கணவர் அசா.1யை 108 ஆம்புலன்ஸ் மூலமாக முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) சம்பவம் நடந்தவுடனே போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது அத்தை லெட்சுமி அஞ்சத்தம்மள் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அஞ்சத்தம்மள் கிராமத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கண்டிலான் கிராமத்திற்கும் சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் இல்லை ஒரு கி.மீ. தூரம் இருக்கும். சம்பவ இடத்திலிருந்து போலிசார் தான் 108 ஆம்புலன்சில் காயம்பட்டதாக சொல்லப்படும் எனது கணவரை ஏற்றி சிகிச்சைக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

2) எனது வீடும், 1ம் எதிரியின் வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். இரண்டு வீட்டிற்கும் நடுவில் பனைமட்டையை வைத்து வேலிஅமைத்துள்ளோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது நான் மட்டும் தான் இருந்தேன் என்றால் இல்லை எனது மாமியார், மாமனார் அனைவரும் இருந்தார்கள். நான் எனது கணவரை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். அப்போது எனது கணவர் யார் யார் எந்தெந்த ஆயுதத்தால் தாக்கியதாக மருத்துவரிடம் கூறினார் என்றால் சரிதான். 1ம் எதிரியின் மாமியார் வேலம்மாளுக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு எங்களுடன் தான் அதே 108 ஆம்புலன்சில் வந்தார்கள் என்றால் சரியல்ல.

3) சம்பவ நாள் சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரிகள் வகையறாக்களை நானும், எனது கணவர் பூப்பாண்டி, லெட்சுமி ஆகியோர் தாக்கியதாக இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3 மற்றும் 4ம் எதிரிகள் இளஞ்செம்பூர் கிராமத்தில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் இல்லை கண்டிலான் கிராமத்தில் தான் வசித்து வருகிறார்கள். எங்களுக்கும், எதிரிகளுக்கும் உள்ள சொத்து பிரச்சனைக்காக

பொய்யாாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் எனது கணவருக்கு ஏற்பட்ட காயம் சம்மந்தமாக புகார் அளித்தேனா என்றால் அளித்தேன். அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் மயக்கமாக இருந்ததால் நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். அசா.1 எனது கணவர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) முதுகுளத்தூர் மற்றும் ராமநாதபுரம் மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். இளஞ்செம்பூர் காவல்நிலையமும், கண்டிலான் கிராமம் சம்பவ இடமும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். ராமநாதபுரம் மருத்துவமனையில் வைத்து போலிசாரிடம் யார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் எனது கணவர் தான் கொடுத்தார்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.113/2023
Prosecution witness.05

| | |
|---|---|
| பெயர் : பூரணம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08th day of May 2024.

08.05.2024

(1ம் எதிரி ஆஜர், 2 முதல் 4ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். அசா.1 பூப்பாண்டி எனது மகன் ஆவார். ஒரு வருடத்திற்கு முன்பாக 02ம் மாதம் 28ம் தேதி இரவு 09.30 மணியளவில் 1ம் எதிரி அர்ச்சுணனுக்கும், பூப்பாண்டிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அப்போது 1ம் எதிரி அசா.1 பூப்பாண்டியை பார்த்து என் பெயருக்கு பட்டா வாங்காமல் எப்படி டா உன் பெயருக்கு பட்டா வாங்கினாய் என்று கேட்டார். உடனே அசா.1 எனக்கும், அதுக்கும் சம்மந்தம் இல்லை உன் தந்தையிடம் கேட்டுக்கொள் என்று 1ம் எதிரியிடம் கூறிவிட்டார்.

2) உடனே 1ம் எதிரி அர்ச்சுணன் தேவிடியா மகனே என்று கூறிக்கொண்டு அருவாமனையை எடுத்து எறிந்ததில் அசா.1ன் காலில் காயம் ஏற்பட்டது. 2ம் எதிரி பழனி கம்பால் அசா.1யை அடித்தார். இளஞ்சிறார் தினேஷ் கத்திக்கம்பால் அசா.1ன் கண்ணிற்கு அருகே வெட்டிவிட்டார். அப்போது அங்கு இருந்த 3ம் எதிரி சேதுபாண்டி அசா.1யை பிடித்துக்கொண்டார், 4ம் எதிரி செல்வி கம்பியால் அசா.1ன் தலையில் அடித்தார். பின்பு அசா.1யை 108 ஆம்புலன்ஸ் மூலமாக முதுகுளத்தூர்

அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலிசாரிடம் புகார் கொடுத்துவிட்டேனா என்றால் கொடுத்துவிட்டேன். போலிசாரிடம் வீட்டில் வைத்து புகார் கொடுத்தது அசா.1 பூப்பாண்டியா அல்லது அசா.4 ஜெயதீபாவா என்றால் அசா.1 பூப்பாண்டி தான் கொடுத்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு வரும்போது அசா.1 பூப்பாண்டி மயக்கமாக இருந்தார் என்றால் சரிதான். அசா.1 மயக்கமாக இருந்ததால் எனது மருமகள் அசா.4 சொல்ல சொல்ல தான் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2) சம்பவம் நடந்தநேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். யார் யார் அடித்தார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் பார்த்தேன். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. நடைபெற்றதாக சொல்லப்படும் சம்பவம் சிக்கல் சாலையிலிருந்து இளஞ்செம்பூர் செல்லும் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றவுடன் போலிசார் எனது வீட்டிற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து தான் 108 க்கு போன் செய்து அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான்.

3) சம்பவ நாள் சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் எதிரிகள் வகையறாக்களை நானும், எனது மகன் பூப்பாண்டி, லெட்சுமி ஆகியோர் தாக்கியதாக இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3 மற்றும் 4 எதிரிகள் இளஞ்செம்பூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இல்லை கண்டிலான் கிராமத்தில் உள்ளார்கள். அசா.1 எனது மகன் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.